# தமிழ் நாடு அரசு
## நெடுஞ்சாலைத் துறை
## கோயமுத்தூர் வட்டம்

*ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண். 6 / 2006 – 2007 / தவஅ /நாள் 17.7.2006*

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் ஆளுநர் அவர்களின் சார்பாகவும் கோயமுத்தூர் நெடுஞ்சாலைத்துறை, கண்காணிப்புப் பொறியாளர் அவர்களால் இத்துறையில் முதல் வகுப்பில் பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கீழ்க்கண்ட பணிகளுக்கு மூடி முத்திரையிட்ட சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் **31.7.2006** அன்று பிற்பகல் 3.00 மணி வரை (அலுவலகக் கடிகாரப்படி) கோயமுத்தூர் நெடுஞ்சாலை வளாகத்தில் கதவு எண். 1653ல் அமைந்துள்ள கண்காணிப்புப் பொறியாளர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்படும். வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் **31.7.2006** அன்று பிற்பகல் 3.15 மணிக்கு கண்காணிப்புப் பொறியாளர் அவர்களால் வருகை தந்துள்ள ஒப்பந்தக்காரர்கள் மற்றும் அவர்தம் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.

| வ. எ. ண் | பணியின் பெயர் | உத்தேச மதிப்பீட்டு தொகை (ரூபாய் லட்சத்தில்) | முன் வைப்புத் தொகை ரூபாய்) | ஒப்பந்தப் படிவம் கிடைக்கும் இடம் |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| | ***பகுதி 2 திட்டம் 2005 – 2006*** | | | |
| | *நான்காம் அழைப்பு* | | | |
| | *கோவை (நெ) கோட்டம்* | | | |
| 1 | *திருப்பூர் (நெ) உட்கோட்டம்* தாராபுரம் – திருப்பூர் சாலையில் கி.மீ. 46/2 ல் உள்ள குறுகிய பாலத்தை திரும்பக் கட்டுதல் | 80.00 | 50,000 | கோட்டப் பொறியாளர் (நெ) கோவை |
| | ***நபார்டு ஆர் ஐ டி எப் XI*** | | | |
| | *இரண்டாம் அழைப்பு* | | | |
| | *பொள்ளாச்சி (நெ) கோட்டம்* | | | |
| 2 | *ஆனைமலை (நெ)உட்கோட்டம* கி.மீ. 1/8 கோஸ்டில் கிராப்ட் சாலையில் பிரிந்து ஸ்டேன்மோர் சிறுகுன்றா சாலையில் சேரும் சாலையில் கிமீ. 0/8ல் உள்ள பாலத்தை திரும்ப கட்டுதல். | 34.60 | 28,000 | கோட்டப் பொறியாளர் (நெ) பொள்ளாச்சி |
| | *ஈரோடு (நெ) கோட்டம்* | | | |
| 3 | *கொடுமுடி (நெ) உட்கோட்டம்* சென்னிமலை – அரச்சலூர் – கொடுமுடி சாலை கி.மீ. 11/8 ல் உள்ள பாலத்தை திரும்பக் கட்டுதல். | 38.30 | 30,000 | கோட்டப் பொறியாளர் (நெ) ஈரோடு |
| | *உதகை (நெ) கோட்டம்* | | | |
| | *முதல் அழைப்பு* | | | |
| 4 | *கூடலூர் (நெ) உட்கோட்டம்* கள்ளிக்கோட்டை – வைத்திரி – கூடலூர் சாலை கி.மீ. 125/8 ல் உள்ள பாலத்தை திரும்பக் கட்டுதல். | 92.00 | 56,000 | கோட்டப் பொறியாளர் (நெ) உதகை |

ஒப்பந்தப்புள்ளி நமூனாக்கள், நிபந்தனைகள், வரைபடங்கள் முதலியன சம்மந்தப்பட்ட (நெ) கோட்டப் பொறியாளர் அலுவலகத்தில் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பில் குறிப்பிட்ட தொகையை கோட்டத்தின் மாவட்ட எல்லையில் உள்ள கருவூலகத்தில் செலுத்தி அதற்கான செல்லுச்சீட்டு அல்லது ஷெட்யூல்டு வங்கியிலிருந்து சம்பந்தப்பட்ட கோட்டப் பொறியாளர் (நெ) அவர்களின் பதவியின் பெயரில் கீழ்க்கண்ட தொகைக்கு அதாவது ஒப்பந்தப்புள்ளி நமூனா விலை, விற்பனை வரி மற்றும் சர்சார்ஜ் சேர்த்து பெறப்பட்ட கேட்பு வரைவுடன் (Demand Draft) **26.7.2006** வரை எல்லா வேலை நாட்களிலும் அலுவலக நேரத்திற்குள் எழுத்து மூலம் விண்ணப்பித்து பெற்றுக் கொள்ளலாம்.

***கணக்குத் தலைப்பு***

***நமூனா விலை***

| | |
|---|---|
| Sl. No. 2&3 = Rs. 3,000/- | 8658 Highways suspense III O.R to the credit |
| Sl. No. 1&4 = Rs. 5,000 /- | of the Divisional Engineers (H) concerned |

***விற்பனை வரி மற்றும் சர்சார்ஜ்***

| | |
|---|---|
| Sl. No. 2&3 = Rs. 378/- | 0040 Sales Tax |
| Sl. No. 1&4 = Rs. 630 /- | |

ஒப்பந்தப்புள்ளி நமூனாக்கள் சம்மந்தப்பட்ட கோட்டப் பொறியாளர் (நெ), அலுவலகத்தில் உரிய கட்டணத்துடன் அஞ்சலக செலவு தொகையும சேர்த்து செலுத்திய ஆவணங்களுடன் வேண்டுகோள் விடுவிக்கும் ஒப்பந்தகாரர்களுக்கு அவர்களுடைய முழு பொறுப்பில் அஞ்சல் அல்லது தனியார் விரைவு அஞ்சல் **(COURIER)** மூலம் அனுப்பப்படும். இது தொடர்பாக காலதாமதத்திற்கு இத்துறை பொறுப்பேற்காது.

ஒப்பந்தக்காரர்கள் தங்களின் ஒப்பந்தப்புள்ளிகளை நேரிலோ (அ) தனியார் விரைவு அஞ்சல் மூலமாகவோ (அ) அஞ்சல் துறை விரைவு அஞ்சல் (அ) பதிவுத் தபாலிலோ (அ) சாதாரண தபாலிலோ கூடுதலாக ஒரு மூடி முத்திரையிட்ட உறையில் வைத்து விலாசமிட்டு ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலரின் கைகளில் **31.7.2006** அன்று பிற்பகல் 3.00 மணிக்குள் பெறத்தக்க வகையில் அனுப்ப அனுமதிக்கப்படுகிறார்கள். மேற்காணும் முறையில் அனுப்பப்படும் ஒப்பந்தப்புள்ளிகள் **31.7.2006** பிற்பகல் 3.00 மணிக்கு மேல் பெறப்பட்டால் அவை திறக்கப்படாமல் சம்பந்தப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமே திரும்ப வழங்கப்படும். தனியார் விரைவு அஞ்சல், அஞ்சல் துறை மற்றும் தனி நபர் மூலம் ஏற்படும் காலதாமதத்திற்கு இத்துறை பொறுப்பேற்காது.

ஒப்பந்தக்காரர்கள் இரண்டு ஆண்டுகள் ஒப்பந்தப்புள்ளிகளில் கலந்து கொள்ளாமலோ அல்லது மூன்று முறை ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் பெற்று ஒப்பந்த அழைப்புகளில் கலந்து கொள்ளாமல் விட்டாலோ அவர்களின் பதிவு இரத்தாகும்.

எம். கருணாமூர்த்தி,
கண்காணிப்பப்பொறியாளர் (நெ)
(நபார்டு மற்றும் கிராமச் சாலைகள்),சேலம்
(கூ.பொ) (நெ) கோவை—18

---

/உண்மை நகல்/

கண்காணிப்புப்பொறியாளருக்காக,
( நெ ) கோவை—18